**In the Court of the  District Munsif, Eraniel**

**Original Suit No. 18/2020** **Date:14.08.2025**

**(PW1)- ராஜினிமோள்**

பிரதிவாதிதரப்பு குறுக்கு விசாரணை

**1.** இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய சொத்தை விளம்புகை செய்து உறுத்து கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன். இதே வழக்கில் பிரதிவாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல, அவ்வாறு வழக்கு ஏதும் கிடையாது. அவ்வாறு பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு குறித்து நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சங்கதிகள் கூறியிருந்தால் அது பொய் என்றால் சரியல்ல. எனக்கு பிரதிவாதிகளை எவ்வளவு வருடங்களாக தெரியும் என்றால் 16 வருடங்களாக தெரியும்.

**2.** சுகுமாரன், ரவிராஜ் ஆகியோரை நான் நேரடியாக பார்த்து பேசியுள்ளேனா என்றால் சுகுமாரனை தெரியாது, ரவிராஜை தெரியும், பார்த்து பேசியுள்ளேன். சுகுமாரனின் மனைவி தான் இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான், 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார். நான் இந்த வழக்கு சொத்தை எப்போது கிரயம் வாங்கினேன் என்றால் 26.12.2019 அன்று கிரயம் வாங்கினேன். மேற்படி வழக்கு சொத்தை யாரிடமிருந்து கிரயம் வாங்கினேன் என்றால் தினேஷ்ராஜ் மனைவி என்பவரிமிருந்து வாங்கினேன். மேரி ஷைலா விற்கு மேற்படி வழக்கு சொத்து எவ்வாறு கிடைத்தது என்றால் சாந்தி என்பவரிடமிருந்து கிரயம் வாங்கினார்.

**3.** சாந்திக்கு எவ்வாறு சொத்து கிடைத்தது என்பது பற்றி மேரி ஷைலாவின் உரிமை ஆவணத்தில் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன், சாந்திக்கு எவ்வாறு கிடைத்தது என்பது பற்றி தெரியாது. சுகுமாரன், ரவிராஜ் , தங்கப்பன் எவ்வளவு செண்ட் சொத்து கிரயம் பெற்றார்கள் என்றால் 7.5 செண்ட் சொத்து கிரயம் பெற்றார்கள். சுகுமாரனுக்குட்பட்ட 2.5 செண்ட் சொத்து அவரது மனைவிக்கு கொடுத்து விட்டார் என்றால் சரிதான். தங்கப்பனுக்குட்பட்ட 2.5 செண்ட்ட சொத்தை 2ம் பிரதிவாதிக்கு கொடுத்து விட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மீதமுள்ள 2.5 செண்ட் ரவிராஜ்க்கு பாத்தியப்பட்டு அதை அவர் உயில் ஆவணத்தின் அடிப்படையில்

அவரது சகோதரருக்கு எழுதி வைத்து விட்டார் என்றால் சரியல்ல, எந்த உயிலும் எழுதவில்லை.

**4.** உயில் ஆவணத்தின் அடிப்படையில் ராதாவிற்கு மேற்படி சொத்தை தங்கப்பன், 2ம் பிரதிவாதிக்கு கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல. மேற்படி உயிலை நான் பார்க்காததால் உயிலை பற்றி என்னால் சாட்சியமளிக்க முடியாது என்றால் சரியல்ல. ரவியின் மனைவி தான் சாந்தி என்பதை காட்ட நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை, தேவைப்பட்டால தாக்கல் செய்யலாம். ரவியின் மனைவி தான் சாந்தி என்பதை காட்ட என்னிடம் எந்த ஆவணமுமில்லையென்றாலும் என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லையென்றாலும் இனிமேலும் தாக்கல் செய்ய முடியாது என்றாலும் சரியல்ல.

**5.** சாந்தி என்பவர் ரவி ராஜ் மனைவி என்று கற்பனையாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. சாந்தி உயிருடன் உள்ளாரா என்றால் உயிருடன் இருக்கிறார். மேரி ஷைலா உயிருடன் உள்ளாரா என்றால் உயிருடன் உள்ளார். நான் வழக்கு சொத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி வழக்கு சொத்திற்கு கிழக்கு பக்க எல்கை என்ன என்றால் 2 அடி வழியாகும். அவ்வாறு பாதையில்லையென்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தின் மேற்கு பக்கம் எல்கை என்ன என்றால் 2 அடி வழிப்பாதையும் , கடை, கட்டிடங்களும் ஆகும்.

**6.** நான் சொல்வது போல் வழக்கு சொத்தின் மேற்கு பக்கம் கடை உள்ளது என்ற விவரத்தை எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். வழக்கு சொத்தின் மேற்கு பக்கம் வழியை தாண்டி கடை அமைந்துள்ளது என்றால் சரிதான். அது என்ன கடை என்றால் அது பற்றி தெரியாது. வழக்கு சொத்தின் வடக்கு எல்கை என்ன என்றால் பிரதிவாதியின் சொத்து ஆகும். வழக்கு பட்டிகை சொத்தை வாய்மொழி பாகம் செய்து கொண்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**7.** வழக்கு பட்டிகை சொத்தின் எல்கையை நாங்கள் எல்கையை பார்த்து வாங்கினோம் என்றால் சரிதான். எந்த அடிப்படையில் எல்கை நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் இக்னேஷ்ராஜின் பத்திரத்தின் அடிப்படையில் செய்தோம். இக்னேஷ்ராஜிற்கு சொத்து பங்கு வைத்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது.

எல்கை பங்கு வைத்ததற்கான எந்த ஆவணத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தை பொறுத்து ஒரு வழக்கு நிலுவையில் இருக்கும் போதே நான் இந்த சொத்தை வாங்கி விட்டேன் என்றால் சரியல்ல. அவ்வாறு வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் போது வாங்கியதால் எந்த வித முன் ஆவணத்தையும் பார்க்காமல் வாங்கி விட்டேன் என்றால் சரியல்ல. நான் எல்கை எது என்று தெரியாமல் சொத்தை வாங்கி விட்டு பிரதிவாதிகளுக்கு கஷ்டத்தை ஏற்படுத்துகிறேன் என்றால் சரியல்ல. எல்கை நிர்ணயம் செய்யாத சொத்தை வாங்குவது எனக்கு எந்த உரிமையும் தராது என்றால் சரியல்ல, நான் வாங்கும் போது எல்கை இருந்தது.

**8.** நான் சொத்தை கிரயம் பெறும் போது கிரயம் கொடுத்த நபரின் சொத்தின் எல்கை சரியென்று தவறாக புரிந்து கொண்டு சொத்தை கிரயம் பெற்றேன் என்றால் சரியல்ல. நான் எதனடிப்படையில் நான் கிரயம் பெற்ற சொத்தின் எல்கை சரியென்று கூறுகிறேன் என்றால் இக்னேஷ்ராஜின் தாய் பத்திரத்தை பார்த்து வாங்கினேன். எனது சாட்சியத்தின் அடிப்படையிடில் பாகபிரிவினை ஆவணம் என்பது இல்லையென்பதும் அதை நான் பார்க்கவில்லையென்பதும் தெரிய வருகிறது என்றால் சரியல்ல. நான் பாகம் செய்யாத சொத்தை பிரித்தெடுக்க முடியாது என்றாலும் பிரிக்காத சொத்தை பொறுத்து நான் எல்கை காண்பித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**9.** பிரதிவாதிகளின் சொத்தை நான் எந்த வித பணமும் கொடுக்காமல் அதை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட ஆவணத்தில் போலி ஆவணம் தயாரித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கு சொத்தின் மீது எந்த உரிமையுமில்லையென்றாலும் எனது கணவரின் திட்டமிட்ட சதியின் அடிப்படையில் இந்த வழக்கு தொடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. இந்தவழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்